# பிற்சேர்க்கை

# புதிய ஏற்பாட்டில் "சபையின்" உருவகங்களும் விவரிப்புகளும்

புதிய ஏற்பாட்டில் சபையானது ஏராளமான ஒப்புவமைகள், உவமானங்கள் மற்றும் உருவகங்களினால் சித்தரிக்கப்படுகின்றது.[1] அவைகளில் சில விவரிப்புகளாகக் காணப்படுகையில், மற்றவை உண்மையான இயற்பெயர்களாய்த் தோற்றம் அளிக்கின்றன. அவற்றில் ஏதொன்றும் மற்ற எல்லாவற்றையும் விட அதிகமாய் வலியுறுத்தப்படக் கூடாது; மாறாக அவை ஒவ்வொன்றும் சபையைப் பற்றி நாம் எவ்விதமான முழுமையான சித்தரிப்பைக் கொண்டிருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகின்றாரோ, அந்தச் சித்தரிப்புக்குப் பங்களிப்பவைகளாகக் காணப்பட வேண்டும்.

ஒப்புவமை என்பது அது போலிருத்தல் அல்லது ஒற்றுமைத் தன்மையின் கூற்றாக ("போல" அல்லது "மாதிரி" என்ற பயன்பாடின்றி விளக்கப் படுவதாக) உள்ளது. உதாரணமாக, எபேசியர் 2:20-22ல் கிறிஸ்து ஒரு மூலைக்கல் என்றும் கிறிஸ்தவர்கள் கட்டிடம் அல்லது ஆலயம் என்றும் சித்தரிக்கப்படுகின்றனர்.

உவமானம் என்பது அதன் பிரதிநிதித்துவத்தில் "போல" அல்லது "மாதிரி" என்பதைப் பயன்படுத்தும் ஒரு எளிய ஒப்புவமையாக உள்ளது. மத்தேயு 13ல் இயேசு மீண்டும் மீண்டும் "பரலோக இராஜ்யமானது … போன்றுள்ளது" என்று கூறிய பொழுது அவர் உவமானங்களைப் பயன்படுத்தினார்.

விவரிப்பு என்பது ஒரு ஒப்புவமையைக் காட்டிலும் அதிகமானதாக உள்ளது. ஒப்பீட்டின் இந்த வகையானது சபையின் பெயருக்கும் அதை விளக்கப் பயன்படும் கருத்து அல்லது உவமைக்கும் இடையில் ஒரு இணைத்தன்மையைக் கொண்டு வர வேத வசனங்களில் பயன் படுத்தப்படுகின்றது.[2] உதாரணமாக, மத்தேயு 13:24-30ல் இயேசு தம்முடைய இராஜ்யத்தின் இயல்பை விவரிப்பதற்கு தோட்டம் ஒன்றின் உவமையைப் பயன்படுத்தினார்.

## தேவனுடன் தொடர்புடையவை (21)

**1. தேவனுடைய ஆசாரியத்துவம் என்ற வகையில்**

*1 பேதுரு 2:9*

*நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரிய மான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.*

*1 பேதுரு 2:5*

*ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்.*

**2. தேவனுடைய பரிசுத்த இனம் என்ற வகையில்**

*1 பேதுரு 2:9*

*நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரிய மான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.*

**3. தேவனுக்குச் சொந்தமானவர்கள் என்ற வகையில்**

*1 பேதுரு 2:9*

*நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரிய மான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.*

**4. தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததி என்ற வகையில்**

*1 பேதுரு 2:9*

*நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரிய மான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.*

**5. தேவனுடைய நகரத்தார் என்ற வகையில்**

*எபேசியர் 2:19*

*ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து.*

**6. தேவனுடைய மாளிகை என்ற வகையில்**

*எபேசியர் 2:20-22*

*அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்; அவர் மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்.*

**7. தேவனுடைய பண்ணை என்ற வகையில்**

*1 கொரிந்தியர் 3:9*

*நாங்கள் தேவனுக்கு உடன்வேலையாட்களாயிருக்கிறோம். நீங்கள் தேவனுடைய பண்ணையும், தேவனுடைய மாளிகையுமா யிருக்கிறீர்கள்.*

**8. தேவன் வாசம் பண்ணுமிடம் என்ற வகையில்**

*எபேசியர் 2:19-22*

*ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும், தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர் களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமா யிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக் கல்லாயிருக்கிறார்; அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்.*

**9. தேவனுடைய பிள்ளைகள் என்ற வகையில்**

*1 யோவான் 3:1*

*நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை.*

*1 யோவான் 3:2*
*பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்.*

**10. தேவனுடைய வீட்டார் (குடும்பம்) என்ற வகையில்**
*1 தீமோத்தேயு 3:14, 15*
*நான் உன்னிடத்திற்குச் சீக்கிரமாய் வருவேனென்று நம்பியிருக்கிறேன். தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது.*

**11. தேவனுடைய பரிபூரணத்துவம் என்ற வகையில்**
*கொலோசெயர் 1:19, 20*
*சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று.*

**12. தேவனுடைய ஆலயம் என்ற வகையில்**
*1 கொரிந்தியர் 3:16, 17*
*நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்.*

**13. தேவனுடைய சுதந்திரர்கள் என்ற வகையில்**
*எபேசியர் 1:18*
*தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்;*

**14. தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்ற வகையில்**
*எபேசியர் 1:4*
*தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே.*

**15. தேவனுடைய சுவிகார புத்திரர் என்ற வகையில்**

*எபேசியர் 1:6*

*தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார்.*

**16. தேவனுடைய செய்கை என்ற வகையில்**

*எபேசியர் 2:10*

*ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையா யிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.*

**17. தேவனுடைய ஜனங்கள் என்ற வகையில்**

*1 பேதுரு 2:10*

*முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை, இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்; முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்.*

**18. தேவனால் நடப்பட்டவர்கள் என்ற வகையில்**

*1 கொரிந்தியர் 3:7, 8*

*அப்படியிருக்க, நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிற வனாலும் ஒன்றுமில்லை, விளையச்செய்கிற தேவனாலே எல்லாமாகும். மேலும் நடுகிறவனும், நீர்ப்பாய்ச்சுகிறவனும் ஒன்றாயிருக்கிறார்கள்; அவனவன் தன்தன் வேலைக்குத் தக்கதாய்க் கூலியைப் பெறுவான்.*

**19. தேவனுடைய இராஜ்யம் என்ற வகையில்**

*வெளிப்படுத்தின விசேஷம் 1:6*

*நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக, ஆமென்.*

**20. தேவனுடைய மகிமையில் பங்கேற்பவர்கள் என்ற வகையில்**

*1 தெசலோனிக்கேயர் 2:11*

*மேலும், தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்க வேண்டுமென்று.*

**21. தேவனுடைய தெய்வீக ஐக்கியத்தில் பிரவேசித்துள்ளவர்கள் என்ற வகையில்**

*1 யோவான் 1:3*

*நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும், கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது.*

*2 கொரிந்தியர் 13:14*

*கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக.*

## கிறிஸ்துவுடன் தொடர்புடையவை (18)

**22. கிறிஸ்துவின் நிறைவு என்ற வகையில்**

*எபேசியர் 1:22, 23*

*எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும், எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்.*

**23. கிறிஸ்துவின் மந்தை என்ற வகையில்**

*யோவான் 10:11*

*நானே நல்ல மேய்ப்பன்: நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்.*

**24. கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரம் என்ற வகையில்**

*எபேசியர் 1:22, 23*

*எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும், எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்.*

**25. "ஒரே சரீரம்" என்ற வகையில்**

*1 கொரிந்தியர் 12:13*

*நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்.*

*எபேசியர் 4:4*

*உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு.*

*எபேசியர் 2:14-16*
*எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இரு திறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப் பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இரு திறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார்.*

**26. கிறிஸ்துவின் அவயவங்கள் என்ற வகையில்**
*1 கொரிந்தியர் 6:15*
*உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா? அப்படியிருக்க, நான் கிறிஸ்துவின் அவயவங்களை வேசியின் அவயவங்களாக்கலாமா? அப்படிச் செய்யலாகாதே.*

**27. தலையாகிய கிறிஸ்துவின் சரீரம் என்ற வகையில்**
*எபேசியர் 5:23, 24*
*கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர் களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும்.*

*கொலோசெயர் 1:18*
*அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்.*

**28. கிறிஸ்துவின் மணவாட்டி என்ற வகையில்**
*2 கொரிந்தியர் 11:2*
*நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காக தேவவைராக்கியமான வைராக்கியங்கொண்டிருக்கிறேன்.*

*எபேசியர் 5:23*
*கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்.*

**29. கிறிஸ்துவிடமிருந்து வந்த கடிதம் (நிருபம்) என்ற வகையில்**
*2 கொரிந்தியர் 3:2, 3*
*எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து*

*வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே. ஏனெனில் நீங்கள் எங்கள் ஊழியத்தினால் உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்களென்று வெளியரங்கமாயிருக்கிறது. அது மையினாலல்ல, ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினாலும்; கற்பலகைகளிலல்ல, இருதயங்களாகிய சதையான பலகைகளிலேயும் எழுதப்பட்டிருக்கிறது.*

**30. கிறிஸ்துவின் சுகந்த வாசனை என்ற வகையில்**

*2 கொரிந்தியர் 2:14*

*கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.*

**31. இயேசுவைக் கர்த்தரென்று அறிக்கையிடுபவர்கள் என்ற வகையில்**

*ரோமர் 10:9, 10*

*என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்.*

**32. கிறிஸ்துவின் பின்பற்றாளர்கள் என்ற வகையில்**

*மாற்கு 9:41*

*நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களாயிருக்கிறபடியினாலே, என் நாமத்தினிமித்தம் உங்களுக்கு ஒரு கலசம் தண்ணீர் குடிக்கக் கொடுக்கிறவன் தன் பலனை அடையாமற்போவதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

**33. கிறிஸ்துவின் சீஷர்கள் என்ற வகையில்**

*அப்போஸ்தலர் 11:26*

*அவர்கள் ஒரு வருஷ காலமாய்ச் சபையோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு உபதேசம்பண்ணினார்கள். முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று.*

**34. கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் என்ற வகையில்**

*1 கொரிந்தியர் 4:1*

*இப்படியாக, எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரரென்றும் எண்ணிக்கொள்ளக்கடவன்.*

**35. கிறிஸ்துவின் ஸ்தானாபதிகள் என்ற வகையில்**[3]

*2 கொரிந்தியர் 5:20*

*ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக்கொண்டு புத்தி சொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதி களாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்து வினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.*

**36. அவரில் நிலைத்திருத்தல் என்ற வகையில்**

*1 யோவான் 2:27*

*நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையுங் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்த படியே அவரில் நிலைத்திருப்பீர்களாக.*

**37. கிறிஸ்துவால் அனுப்பப்பட்டவர்கள் என்ற வகையில்**

*மாற்கு 16:15, 16*

*பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாச முள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்.*

**38. கிறிஸ்துவுக்குச் சாட்சிகள் என்ற வகையில்**

*3 யோவான் 3*

*சகோதரர் வந்து நீ சத்தியத்தில் நடந்து கொள்ளுகிறாய் என்று உன்னுடைய உண்மையைக் குறித்துச் சாட்சி கொடுத்தபோது மிகவும் சந்தோஷப்பட்டேன்.*

*3 யோவான் 6*

*அவர்கள் உன்னுடைய அன்பைக் குறித்துச் சபைக்கு முன்பாகச் சாட்சி சொன்னார்கள்; தேவனுக்கு முன்பாகப் பாத்திரமானபடி அவர்களை நீ வழிவிட்டனுப்பினால் நலமாயிருக்கும்.*

**39. திராட்சச் செடியின் கொடிகள் என்ற வகையில்**

*யோவான் 15:5*

*நானே திராட்சச் செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது.*

## *பரிசுத்த ஆவியானவருடன் தொடர்புடையவை (3)*

**40. ஆவியானவர் வாசம் பண்ணுகிறவர்கள் என்ற வகையில்**

*1 கொரிந்தியர் 3:16*

*நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?*

**41. ஆவியானவரால் பிறந்தவர்கள் என்ற வகையில்**

*யோவான் 3:5*

*இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.*

**42. பரிசுத்த ஆவியானவரின்படி நடந்து கொள்கின்றவர்கள் என்ற வகையில்**

*ரோமர் 8:3, 4*

*அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப் பிரமாணம் செய்யக்கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப் பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்.*

## *கிறிஸ்தவர்களுடன் தொடர்புடையவை (61)*
## *ஏற்படுத்தப்பட்ட உறுதிப்பாட்டின்படியானவை (33)*

**43. வழியென்ற வகையில்**

*அப்போஸ்தலர் 9:1, 2*

*சவுல் என்பவன் இன்னுங் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய்; இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும், ஸ்திரீகளையாகிலும் தான் கண்டு பிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி, தமஸ்குவிலுள்ள ஜெபஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான்.*

*(அப். 19:9, 23; 22:4; 24:14, 22 ஆகியவற்றையும் காணவும்)*

**44. பூமிக்கு உப்பு என்ற வகையில்**

*மத்தேயு 5:13*

*நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப்*

*போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப் படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது.*

### 45. தூணும் ஆதாரமும் என்ற வகையில்

*1 தீமோத்தேயு 3:14, 15*

*நான் உன்னிடத்திற்குச் சீக்கிரமாய் வருவேனென்று நம்பி யிருக்கிறேன். தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது.*

### 46. சாத்தானுக்கெதிராகப் போராடுபவர்கள் என்ற வகையில்

*எபேசியர் 6:12, 13*

*ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங் களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ள வர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.*

### 47. சுடர் என்ற வகையில்

*பிலிப்பியர் 2:14, 15*

*நான் வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டதுமில்லை யென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப் பதற்கு, ஜீவ வசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப் போலப் பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறு பாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும், கபடற்றவர் களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு.*

*(மத். 5:14; அப். 13:47; எபே. 5:8; 1 தெச. 5:5; 1 பேது. 2:9 ஆகியவற்றையும் காணவும்.)*

### 48. விசுவாசிகள் என்ற வகையில்

*எபேசியர் 1:1*

*தேவனுடைய சித்தத்தினாலே இயேசுகிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பவுல், எபேசுவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கு எழுதுகிறதாவது.*

**49. நீதிக்கு அடிமைகள் என்ற வகையில்**

*ரோமர் 6:19*

*உங்கள் மாம்ச பலவீனத்தினிமித்தம் மனுஷர் பேசுகிற பிரகாரமாய்ப் பேசுகிறேன். அக்கிரமத்தை நடப்பிக்கும்படி முன்னே நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும், அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்ததுபோல, இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள்.*

**50. ஒரே விசுவாசத்திற்கு நியமிக்கப்பட்டவர்கள் என்ற வகையில்**

*எபேசியர் 4:5*

*ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும்.*

*அப்போஸ்தலர் 6:7*

*தேவவசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று; ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படிந்தார்கள்.*

**51. வளருகின்ற சரீரம் என்ற வகையில்**

*எபேசியர் 4:14-16*

*நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். அவராலே சரீரம் முழுவதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத் தக்கதாய்க் கிரியை செய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது.*

**52. நிலத்திலிட்ட நல்ல விதை என்ற வகையில்**

*மத்தேயு 13:24-30*

*வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: பரலோக ராஜ்யம் தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது. மனுஷர் நித்திரைபண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான். பயிரானது வளர்ந்து கதிர்விட்டபோது, களைகளும் காணப்பட்டது. வீட்டெஜமானுடைய வேலைக்காரர் அவனிடத்தில் வந்து: ஆண்டவனே, நீர் உமது நிலத்தில் நல்ல விதையை விதைத்தீர் அல்லவா? பின்னை அதில் களைகள் எப்படி*

*உண்டானது என்றார்கள். அதற்கு அவன்: சத்துரு அதைச் செய்தான் என்றான். அப்பொழுது வேலைக்காரர்: நாங்கள் போய் அவைகளைப் பிடுங்கிப்போட உமக்குச் சித்தமா? என்று கேட்டார்கள். அதற்கு அவன்: வேண்டாம், களைகளைப் பிடுங்கும்போது நீங்கள் கோதுமையையுங்கூட வேரோடே பிடுங்காதபடிக்கு, இரண்டையும் அறுப்பு மட்டும் வளரவிடுங்கள். அறுப்புக்காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி: முதலாவது, களைகளைப் பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள்; கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள் என்பேன் என்று சொன்னான் என்றார்.*

**53. கடுகு விதை என்ற வகையில்**

*மத்தேயு 13:31, 32*

*வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: பரலோக ராஜ்யம் கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது. அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்தான். அது சகல விதைகளிலும் சிறிதாயிருந்தும், வளரும்போது, சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்து அடையத் தக்க மரமாகும் என்றார்.*

**54. மாவில் இடப்பட்ட புளித்த மா என்ற வகையில்**

*மத்தேயு 13:33*

*வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: பரலோக ராஜ்யம் புளித்த மாவுக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு ஸ்திரீ எடுத்து, முழுவதும் புளிக்கும் வரைக்கும், மூன்றுபடி மாவிலே அடக்கி வைத்தாள் என்றார்.*

**55. விலை உயர்ந்த முத்து என்ற வகையில்**

*மத்தேயு 13:45, 46*

*மேலும், பரலோக ராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்.*

**56. இரட்சகரால் விதைக்கப்பட்ட விதையைப் பெற்றவர்கள் என்ற வகையில்**

*மத்தேயு 13:19-23*

*ஒருவன், ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கும் போது, பொல்லாங்கன் வந்து, அவன் இருதயத்தில் விதைக்கப் பட்டதைப் பறித்துக்கொள்ளுகிறான்; அவனே வழியருகே விதைக்கப்பட்டவன். கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்டு, உடனே அதைச் சந்தோஷத்தோடே ஏற்றுக்*

கொள்ளுகிறவன்; ஆகிலும் தனக்குள்ளே வேரில்லாதவனாய், கொஞ்சக்காலமாத்திரம் நிலைத்திருப்பான்; வசனத்தினிமித்தம் உபத்திரவமும், துன்பமும் உண்டானவுடனே இடறலடைவான். முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக் கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருங்கிப் போடுகிறதினால், அவனும் பலனற்றுப் போவான். நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும், அறுபதாகவும், முப்பதாகவும் பலன் தருவான் என்றார்.

### 57. கர்த்தருடைய திராட்சத் தோட்டம் என்ற வகையில்

*மத்தேயு 20:1-16*

*பரலோக ராஜ்யம் வீட்டெஜமானாகிய ஒரு மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது; அவன் தன் திராட்சத்தோட்டத்துக்கு வேலையாட்களை அமர்த்த அதிகாலையிலே புறப்பட்டான். வேலையாட்களுடன் நாளொன்றுக்கு ஒரு பணம் கூலிபேசி, அவர்களைத் தன் திராட்சத்தோட்டத்துக்கு அனுப்பினான். மூன்றாம் மணிவேளையிலும் அவன் புறப்பட்டுப்போய், கடைத்தெருவிலே சும்மா நிற்கிற வேறு சிலரைக் கண்டு: நீங்களும் திராட்சத்தோட்டத்துக்குப் போங்கள், நியாயமானபடி உங்களுக்குக் கூலி கொடுப்பேன் என்றான். அவர்களும் போனார்கள். மறுபடியும், ஆறாம், ஒன்பதாம் மணி வேளையிலும் அவன் போய் அப்படியே செய்தான். பதினோராம் மணி வேளையிலும் அவன் போய், சும்மா நிற்கிற வேறு சிலரைக்கண்டு; நீங்கள் பகல் முழுவதும் இங்கே சும்மா நிற்கிறதென்ன என்று கேட்டான். அதற்கு அவர்கள்: ஒருவரும் எங்களுக்கு வேலையிடவில்லை என்றார்கள். அவன் அவர்களை நோக்கி: நீங்களும் திராட்சத் தோட்டத்துக்குப் போங்கள். நியாயமானபடி கூலி பெற்றுக் கொள்வீர்கள் என்றான். சாயங்காலத்தில், திராட்சத்தோட்டத்துக்கு எஜமான் தன் காரியகாரனை நோக்கி: நீ வேலையாட்களை அழைத்து, பிந்திவந்தவர்கள் தொடங்கி முந்திவந்தவர்கள் வரைக்கும் அவர்களுக்குக் கூலிகொடு என்றான். அப்பொழுது பதினோராம் மணி வேளையில் வேலையமர்த்தப்பட்டவர்கள் வந்து, ஆளுக்கு ஒவ்வொரு பணம் வாங்கினார்கள். முந்தி அமர்த்தப்பட்டவர்கள் வந்து தங்களுக்கு அதிக கூலி கிடைக்கும் என்று எண்ணினார்கள், அவர்களும் ஆளுக்கு ஒவ்வொரு பணம் வாங்கினார்கள். வாங்கிக்கொண்டு, வீட்டெஜமானை நோக்கி: பிந்தி வந்தவர்களாகிய இவர்கள் ஒரு மணி நேரமாத்திரம் வேலை செய்தார்கள்; பகலின் கஷ்டத்தையும் வெயிலின் உஷ்ணத்தையும் சகித்த எங்களுக்கு இவர்களைச் சமமாக்கினீரே என்று முறுமுறுத்தார்கள். அவர்களில் ஒருவனுக்கு அவன் பிரதியுத்தரமாக: சிநேகிதனே, நான் உனக்கு அநியாயஞ் செய்யவில்லை; நீ*

என்னிடத்தில் ஒரு பணத்துக்குச் சம்மதிக்கவில்லையா? உன்னுடையதை நீ வாங்கிக் கொண்டு போ, உனக்குக் கொடுத்தது போலப் பிந்தி வந்தவனாகிய இவனுக்கும் கொடுப்பது என்னுடைய இஷ்டம். என்னுடையதை என் இஷ்டப்படி செய்ய எனக்கு அதிகாரமில்லையா? நான் தயாளனாயிருக்கிறபடியால், நீ வன்கண்ணனாயிருக்கலாமா என்றான். இவ்விதமாக, பிந்தினோர் முந்தினோராயும், முந்தினோர் பிந்தினோராயும் இருப்பார்கள்; அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார்.

### 58. கர்த்தருடைய அழைப்பை ஏற்றுக் கொண்டவர்கள் என்ற வகையில்

*மத்தேயு 22:2-14*

பரலோகராஜ்யம் தன் குமாரனுக்குக் கலியாணஞ்செய்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அழைக்கப்பட்டவர்களைக் கலியாணத்திற்கு வரச் சொல்லும்படி அவன் தன் ஊழியக்காரரை அனுப்பினான்; அவர்களோ வர மனதில்லாதிருந்தார்கள். அப்பொழுது அவன் வேறு ஊழியக்காரரை அழைத்து: நீங்கள் போய், இதோ, என் விருந்தை ஆயத்தம் பண்ணினேன், என் எருதுகளும் கொழுத்த ஜெந்துக்களும் அடிக்கப்பட்டது, எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது; கலியாணத்திற்கு வாருங்கள் என்று அழைக்கப்பட்டவர்களுக்குச் சொல்லுங்களென்று அனுப்பினான். அழைக்கப்பட்டவர்களோ அதை அசட்டைபண்ணி, ஒருவன் தன் வயலுக்கும், ஒருவன் தன் வியாபாரத்திற்கும் போய் விட்டார்கள். மற்றவர்கள் அவன் ஊழியக்காரரைப் பிடித்து, அவமானப்படுத்தி, கொலை செய்தார்கள். ராஜா அதைக் கேள்விப்பட்டு, கோபமடைந்து, தன் சேனைகளை அனுப்பி, அந்தக் கொலைபாதகரை அழித்து, அவர்கள் பட்டணத்தையும் சுட்டெரித்தான். அப்பொழுது அவன் தன் ஊழியக்காரரை நோக்கி: கலியாண விருந்து ஆயத்தமாயிருக்கிறது, அழைக்கப்பட்டவர்களோ அதற்கு அபாத்திரராய்ப் போனார்கள். ஆகையால் நீங்கள் வழிச் சந்திகளிலே போய், காணப்படுகிற யாவரையும் கலியாணத்திற்கு அழைத்துக் கொண்டு வாருங்கள் என்றான். அந்த ஊழியக்காரர் புறப்பட்டு, வழிகளிலே போய், தாங்கள் கண்ட நல்லோர் பொல்லார் யாவரையும் கூட்டிக் கொண்டு வந்தார்கள்; கலியாண சாலை விருந்தாளிகளால் நிறைந்தது. விருந்தாளிகளைப் பார்க்கும்படி ராஜா உள்ளே பிரவேசித்தபோது, கலியாண வஸ்திரம் தரித்திராத ஒரு மனுஷனை அங்கே கண்டு: சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டான். அதற்கு அவன் பேசாமலிருந்தான். அப்பொழுது ராஜா பணிவிடைக்காரரை நோக்கி: இவனைக் கையுங்காலும் கட்டிக் கொண்டுபோய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள் என்றான். அந்தப்படியே,

*அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார்.*

*வெளிப்படுத்தின விசேஷம் 22:17*
*ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத் தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்.*

### 59. ஆயத்தமாயிருந்த கன்னியர்கள் என்ற வகையில்

*மத்தேயு 25:1-13*
*அப்பொழுது, பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு, மணவாளனுக்கு எதிர்கொண்டு போகப்புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும். அவர்களில் ஐந்துபேர் புத்தியுள்ளவர்களும், ஐந்துபேர் புத்தியில்லாதவர்களுமாயிருந்தார்கள். புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக்கொண்டு போனார்கள், எண்ணெயையோ கூடக் கொண்டு போகவில்லை. புத்தியுள்ளவர்கள் தங்கள் தீவட்டிகளோடுங் கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டுபோனார்கள். மணவாளன் வரத் தாமதித்தபோது, அவர்கள் எல்லாரும் நித்திரை மயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள். நடுராத்திரியிலே: இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று. அப்பொழுது, அந்தக் கன்னிகைகள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள். புத்தியில்லாதவர்கள் புத்தியுள்ளவர்களை நோக்கி: உங்கள் எண்ணெயில் எங்களுக்குக் கொஞ்சங் கொடுங்கள், எங்கள் தீவட்டிகள் அணைந்துபோகிறதே என்றார்கள். புத்தியுள்ளவர்கள் பிரதியுத்தரமாக: அப்படியல்ல, எங்களுக்கும் உங்களுக்கும் போதாமலிராதபடி, நீங்கள் விற்கிறவர்களிடத்திற் போய், உங்களுக்காக வாங்கிக்கொள்ளுங்கள் என்றார்கள். அப்படியே அவர்கள் வாங்கப் போனபோது மணவாளன் வந்துவிட்டார்; ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடே கூடக் கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள்; கதவும் அடைக்கப்பட்டது. பின்பு, மற்றக் கன்னிகைகளும் வந்து: ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத் திறக்க வேண்டும் என்றார்கள். அதற்கு அவர்: உங்களை அறியேன் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். மனுஷகுமாரன் வரும் நாளையாவது, நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்.*

*2 கொரிந்தியர் 11:2*
*நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே*

புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காகத் தேவவைராக்கியமான வைராக்கியங்கொண்டிருக்கிறேன்.

**60. வசனத்தை ஏற்றுக் கொண்டவர்கள் என்ற வகையில்**

*அப்போஸ்தலருடை நடபடிகள் 2:41*

*அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத் தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.*

**61. தண்ணீரினால் இரட்சிக்கப்பட்டவர்கள் என்ற வகையில்**

*1 பேதுரு 3:21, 22*

*அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது. அவர் பரலோகத்திற்குப் போய், தேவனுடைய வலது பாரிசத்தில் இருக்கிறார். தேவ தூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது.*

*எபேசியர் 5:26*

*தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும்.*

*தீத்து 3:5*

*நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்.*

*எபிரேயர் 10:22*

*துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்.*

**62. புளிப்பில்லாத அப்பம் என்ற வகையில்**

*1 கொரிந்தியர் 5:7*

*ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே.*

**63. கர்த்தருக்கு ஜீவபலிகள் என்ற வகையில்**

*ரோமர் 12:1*

*அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.*

**64. கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுபவர்கள் என்ற வகையில்**

*1 கொரிந்தியர் 10:21*

*நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத் திலும் பானம்பண்ணக்கூடாதே; நீங்கள் கர்த்தருடைய போஜன பந்திக்கும் பேய்களுடைய போஜன பந்திக்கும் பங்குள்ளவர் களாயிருக்கக்கூடாதே.*

**65. ஒரே அப்பத்தில் பங்கு பெறுகிறவர்கள் என்ற வகையில்**

*1 கொரிந்தியர் 10:16, 17*

*நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்.*

**66. கர்த்தருடைய பாத்திரத்தில் பங்கேற்பவர்கள் என்ற வகையில்**

*1 கொரிந்தியர் 10:16*

*நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?*

*1 கொரிந்தியர் 10:21*

*நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத் திலும் பானம்பண்ணக்கூடாதே; நீங்கள் கர்த்தருடைய போஜன பந்திக்கும் பேய்களுடைய போஜனபந்திக்கும் பங்குள்ளவர்களா யிருக்கக்கூடாதே.*

*1 கொரிந்தியர் 11:27*

*இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான்.*

**67. ஆவிக்குரிய வகையில் உடுத்துவிக்கப்பட்டவர்கள் என்ற வகையில்**

*கலாத்தியர் 3:27*

*ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே.*

*கொலோசெயர் 3:8-11*

*இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டு விடுங்கள். ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள். பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே. அதிலே கிரேக்கனென்றும் யூதனென்றுமில்லை, விருத்தசேசனமுள்ளவனென்றும், விருத்தசேதனமில்லாதவனென்றுமில்லை, புறஜாதியானென்றும், புறதேசத்தானென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை; கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார்.*

*(ரோமர் 13:12-14; எபே. 4:22-24; 6:12-20; 1 தெச. 5:5-8ஐயும் காணவும்.)*

**68. தங்கள் உடைகளைக் கறைப்படுத்திக் கொள்ளாதவர்கள் என்ற வகையில்**

*வெளிப்படுத்தின விசேஷம் 3:4*

*ஆனாலும் தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சில பேர் சர்தையாலும் உனக்குண்டு; அவர்கள் பாத்திரவான்களானபடியால் வெண்வஸ்திரந்தரித்து என்னோடேகூட நடப்பார்கள்.*

**69. இயேசுவைத் தங்கள் இதயங்களில் விருந்தாளியாய் ஏற்றுக்கொண்டு அவரை விருந்தளிப்பவராகும்படி அனுமதித்தவர்கள் என்ற வகையில்.**

*வெளிப்படுத்தின விசேஷம் 3:20*

*இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்.*

**70. கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற எல்லாருடனும் சமத்துவத்தில் பிரவேசித்துள்ளவர்கள் என்ற வகையில்**

*யாக்கோபு 2:1-5*

*என் சகோதரரே, மகிமையுள்ள நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தைப் பட்சபாதத்தோடே பற்றிக் கொள்ளாதிருப்பீர்களாக. ஏனெனில், பொன் மோதிரமும் மினுக்குள்ள வஸ்திரமும் தரித்திருக்கிற ஒரு மனுஷனும், கந்தையான வஸ்திரம்தரித்திருக்கிற ஒரு தரித்திரனும் உங்கள் ஆலயத்தில் வரும்போது, மினுக்குள்ள வஸ்திரந்தரித்தவனைக் கண்ணோக்கி: நீர் இந்த நல்ல இடத்தில் உட்காரும் என்றும்; தரித்திரனைப் பார்த்து நீ அங்கே நில்லு, அல்லது இங்கே என் பாதபடியண்டையிலே உட்காரு என்றும் நீங்கள் சொன்னால், உங்களுக்குள்ளே பேதகம்பண்ணி, தகாத சிந்தனைகளோடே நிதானிக்கிறவர்களாயிருப்பீர்களல்லவா? என் பிரியமான சகோதரரே, கேளுங்கள்; தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம்பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்துகொள்ளவில்லயா?*

*கலாத்தியர் 3:28*

*யூதனென்றும், கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்.*

**71. ஆவியின் ஒருமையைக் காக்க நாடுகின்றவர்கள் என்ற வகையில்**

*எபேசியர் 4:1-3*

*ஆதலால், கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து; மிகுந்த மனத் தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதை யாயிருங்கள்.*

**72. கிறிஸ்துவிடம் வந்துள்ளவர்கள் என்ற வகையில்**

*மத்தேயு 11:28, 29*

*வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.*

**73. கிறிஸ்துவுடனான ஒருமைப்பாட்டிற்குள் பிரவேசித்துள்ளவர்கள் என்ற வகையில்**

*ரோமர் 6:3*

*கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?*

*ரோமர் 6:4*

*மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்.*

**74. கிறிஸ்துவுடன் ஒருமைப்பாட்டிற்குள் வாழ்கின்றவர்கள் என்ற வகையில்**

*ரோமர் 6:8*

*ஆகையால் கிறிஸ்துவுடனே கூட நாம் மரித்தோமானால், அவருடனேகூடப் பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம்.*

*ரோமர் 8:17*

*நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்து வுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்.*

*கலாத்தியர் 2:20*

*கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத் திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத் தினாலே பிழைத்திருக்கிறேன்.*

*எபேசியர் 2:5*

*அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்.*

*கொலோசெயர் 3:3*

*ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது.*

**75. எந்நாளும் வளருகின்ற கட்டிடம் என்ற வகையில்**

*எபேசியர் 2:21, 22*

*அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டுவருகிறீர்கள்.*

## பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்கள் பற்றியவை (7)

**76. மீட்கப்பட்டவர்கள் என்ற வகையில்**

*எபேசியர் 1:7, 8*

*அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. அந்தக் கிருபையை அவர் சகல ஞானத் தோடும், புத்தியோடும் எங்களிடத்தில் பெருகப்பண்ணினார்.*

**77. மன்னிக்கப்பட்டவர்கள் என்ற வகையில்**

*எபேசியர் 1:7, 8*

*அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. அந்தக் கிருபையை அவர் சகல ஞானத் தோடும், புத்தியோடும் எங்களிடத்தில் பெருகப்பண்ணினார்.*

**78. நீதிமான்களாக்கப்பட்டவர்கள் என்ற வகையில்**

*ரோமர் 3:23, 24*

*எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசு விலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்.*

*ரோமர் 5:1*

*இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக் கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.*

**79. ஒப்புரவாக்கப்பட்டவர்கள் என்ற வகையில்**

*2 கொரிந்தியர் 5:18, 19*

*இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்.*

**80. இரத்தத்தில் கழுவப்பட்டவர்கள் என்ற வகையில்**

*அப்போஸ்தலருடைய நடபடிகள் 22:16*

*இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்.*

**81. ஜீவனைப் பெறுகிறவர்கள் என்ற வகையில்**

*அப்போஸ்தலருடைய நடபடிகள் 11:18*

*இவைகளை அவர்கள் கேட்டபொழுது அமர்ந்திருந்து: அப்படியானால் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலைத் தேவன் புறஜாதியாருக்கும் அருளிச்செய்தார் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்.*

*1 யோவான் 5:13*

*உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்.*

**82. பிதாவையும் குமாரனையும் பெறுகின்றவர்கள் என்ற வகையில்**

*1 யோவான் 2:24*

*ஆகையால் ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருக்கக்கடவது; ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருந்தால், நீங்களும் குமாரனிலும் பிதாவிலும் நிலைத்திருப்பீர்கள்.*

## கொடுக்கப்பட்டுள்ள நிலைப்பாட்டைப் பற்றியவை (21)

**83. பரதேசிகள் என்ற வகையில்**

*1 பேதுரு 1:1, 2*

*இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பேதுரு, பொந்து, கலாத்தியா, கப்பத்தோக்கியா, ஆசியா, பித்தினியா தேசங்களிலே சிதறியிருக்கிறவர்களில், பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தந் தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு எழுதுகிறதாவது: கிருபையும் சமாதானமும் உங்களுக்குப் பெருகக்கடவது.*

**84. ஆவிக்குரிய இஸ்ரவேலர் என்ற வகையில்**

*கலாத்தியர் 6:16*

*இந்தப் பிரமாணத்தின்படி நடந்து வருகிறவர்கள் எவர்களோ,*

அவர்களுக்கும், தேவனுடைய இஸ்ரவேலருக்கும், சமாதானமும் இரக்கமும் உண்டாயிருப்பதாக.

**85. புதுச் சிருஷ்டிகள் என்ற வகையில்**

*2 கொரிந்தியர் 5:17*

*இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.*

**86. ஜீவனுள்ள கற்கள் என்ற வகையில்**

*1 பேதுரு 2:5*

*ஜீவனுள்ள கற்களைப்போல் ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்.*

**87. ஒலிவ மரம் என்ற வகையில்**

*ரோமர் 11:17-21*

*சில கிளைகள் முறித்துப் போடப்பட்டிருக்க, காட்டொலிவ மரமாகிய நீ அவைகள் இருந்த இடத்தில் ஒட்டவைக்கப்பட்டு, ஒலிவ மரத்தின் வேருக்கும் சாரத்துக்கும் உடன்பங்காளியாயிருந்தாயானால், நீ அந்தக் கிளைகளுக்கு விரோதமாய்ப் பெருமை பாராட்டாதே; பெருமை பாராட்டுவாயானால், நீ வேரைச் சுமக்காமல், வேர் உன்னைச் சுமக்கிறதென்று நினைத்துக்கொள். நான் ஒட்டவைக்கப்படுவதற்கு அந்தக் கிளைகள் முறித்துப் போடப்பட்டதென்று சொல்லுகிறாயே. நல்லது, அவிசுவாசத்தினாலே அவைகள் முறித்துப்போடப்பட்டன, நீ விசுவாசத்தினாலே நிற்கிறாய்; மேட்டிமைச் சிந்தையாயிராமல் பயந்திரு. சுபாவக்கிளைகளை தேவன் தப்பவிடாதிருக்க, உன்னையும் தப்ப விடமாட்டார் என்று எச்சரிக்கையாயிரு.*

**88. பரலோகத்தின் குடிமக்கள் என்ற வகையில்**

*பிலிப்பியர் 3:20, 21*

*நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்.*

**89. அந்நியர்கள் என்ற வகையில்**

*எபிரேயர் 11:13*

*இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக் கொண்டு, பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள்.*

*1 பேதுரு 2:11*

*பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி,*

**90. சிதறியிருக்கிறவர்கள் என்ற வகையில்**

*யாக்கோபு 1:1*

*தேவனுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் ஊழியக் காரனாகிய யாக்கோபு, சிதறியிருக்கிற பன்னிரெண்டு கோத்திரங் களுக்கும் வாழ்த்துதல் சொல்லி எழுதுகிறதாவது:*

**91. கல்லின் மீது கட்டப்பட்டவர்கள் என்ற வகையி**ல்

*மத்தேயு 16:18*

*மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை.*

**92. ஆபிரகாமின் பிள்ளைகள் என்ற வகையில்**

*கலாத்தியர் 3:29*

*நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததி யாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்.*

**93. பன்னிரண்டு கோத்திரங்கள் என்ற வகையில்**

*யாக்கோபு 1:1*

*தேவனுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் ஊழியக்கார னாகிய யாக்கோபு, சிதறியிருக்கிற பன்னிரண்டு கோத்திரங் களுக்கும் வாழ்த்துதல் சொல்லி எழுதுகிறதாவது.*

**94. உண்மையான விருத்தசேதனமுள்ளவர்கள் என்ற வகையில்**

*பிலிப்பியர் 3:3*

*ஏனெனில், மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனைசெய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மை பாராட்டுகிற நாமே விருத்தசேதனமுள்ளவர்கள்.*

**95. முதற் பலன்கள் என்ற வகையில்**

*யாக்கோபு 1:18*

*அவர் சித்தங் கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற் பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜநிப்பித்தார்.*

*வெளிப்படுத்தின விசேஷம் 14:4*

*ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் இவர்களே; கற்புள்ளவர்கள் இவர்களே; ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே; இவர்கள் மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற் பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள்.*

**96. புதிய மனிதன் என்ற வகையில்**

*எபேசியர் 2:15*

*சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து இப்படிச் சமாதானம்பண்ணி.*

**97. பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் என்ற வகையில்**

*1 கொரிந்தியர் 1:1, 2*

*தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனாகிய பவுலும், சகோதரனாகிய சொஸ்தெனேயும், கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும், எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுது கொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது.*

**98. சிநேகிதர்கள் என்ற வகையில்**

*3 யோவான் 14*

*சீக்கிரமாய் உன்னைக் காணலாமென்று நம்பியிருக்கிறேன், அப்பொழுது முகமுகமாய்ப் பேசிக்கொள்ளுவோம். உனக்குச் சமாதானம் உண்டாவதாக. சிநேகிதர் உனக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள். சிநேகிதரைப் பேர்பேராக வாழ்த்துவாயாக.*

**99. சகோதரத்துவம் என்ற வகையில்**

*1 பேதுரு 2:17*

*எல்லாரையும் கனம்பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்பு கூருங்கள்; தேவனுக்குப் பயந்திருங்கள்; ராஜாவைக் கனம் பண்ணுங்கள்.*

**100. தெரிந்து கொள்ளப்பட்ட அம்மாள் என்ற வகையில்**

*2 யோவான் 1-3*

*நமக்குள் நிலைநிற்கிறதும் என்றென்றைக்கும் நம்மோடிருப்பது மாகிய சத்தியத்தினிமித்தம், நான் மாத்திரமல்ல, சத்தியத்தை அறிந்திருக்கிற யாவரும் சத்தியத்தின்படி நேசித்திருக்கிறவளும், தெரிந்துகொள்ளப்பட்டவளுமாகிய அம்மாளுக்கும் அவளுடைய பிள்ளைகளுக்கும், மூப்பனாகிய நான் எழுதுகிறதாவது: பிதா வாகிய தேவனாலும் பிதாவின் குமாரனாயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், கிருபையும் இரக்கமும் சமாதானமும், சத்தியத்தோடும் அன்போடுங் கூட, உங்களோடிருப்பதாக.*

**101. மீன் பிடிக்கும் வலை என்ற வகையில்**

*மத்தேயு 13:47-50*

*அன்றியும், பரலோகராஜ்யம் கடலிலே போடப்பட்டு, சகல விதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது. அது நிறைந்தபோது, அதைக் கரையில் இழுத்து, உட்கார்ந்து, நல்லவைகளைக் கூடைகளில் சேர்த்து, ஆகாதவை களை எறிந்துபோடுவார்கள். இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும். தேவ தூதர்கள் புறப்பட்டு, நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றார்.*

**102. நமது கர்த்தரால் நடப்பட்ட நாற்று என்ற வகையில்**

*மத்தேயு 15:13*

*அவர் பிரதியுத்தரமாக: என் பரம பிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும்.*

**103. சமாதானக்கட்டினால் வாழ்கின்றவர்கள் என்ற வகையில்**

*எபேசியர் 4:1-3*

*ஆதலால், கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத்தாழ்மை யும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்.*

---

குறிப்புகள்

[1]புதிய ஏற்பாட்டில் சபைக்குப் பயன்படுத்தப்படும் ஒப்புவமைகள் மற்றும் உருவகங்களின் இந்த அட்டவணையைத் தொகுத்த விஷயத்தில் நான், பவுல்

S. மினியர் அவர்களுக்கு மிகுந்த நன்றியுடையவனாய் இருக்கிறேன். அவரது தொகுப்பின் ஒவ்வொரு கருத்துக்களுடனும் எனக்கு உடன்பாடில்லை, ஆனாலும் இப்பாடத்தின் மீதான அவருடைய நூலானது மிகவும் உதவியான குறிப்புரையாக இருந்துள்ளது, மற்றும் இக்கண்ணோக்கிலிருந்து, இப்பாடத்தை மிகவும் ஆழமாய்ப் படிக்க விரும்பும் எவரொருவருக்கும் அவருடைய இந்நூலைப் பரிந்துரைக் கின்றேன். See Paul S. Minear, *Images of the Church in the New Testament* (Philadelphia: Westminster Press, 1960). [2]பவுல் S. மினியர் அவர்கள் "புதிய ஏற்பாட்டில் சபையின் உருவங்கள்" என்ற தமது பட்டியலில் ஒரு படகு, முற்பிதாக்கள், வனாந்திர யாத்திரை, தாவீதின் வீடு, எஞ்சியுள்ளவர்கள், ஆள்கின்ற ஆட்டுக்குட்டியானவர், பரிசுத்த நகரம், பண்டிகைகள், பிந்தின ஆதாம், மனுஷகுமாரன், ஓய்வுநாள், வருகின்ற யுகம், ஜீவ விருட்சம் மற்றும் மேசியாவின் தாய் ஆகிய உருவகங் களை(யும்) உள்ளடக்கினார்; ஆனால் இந்த உருவகங்கள் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களால் சபைக்கு வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ பயன்படுத்தப்பட்டுள்ளதை நான் காணவில்லை. மேலும் அவர் அட்டவணைப் படுத்தியுள்ள சில உருவகங்கள் மற்ற உருவகங்களின் பிரதிகளாய் இருப்பதையும் நான் கண்டறிந்துள்ளேன்; ஆகையால், அவைகளை நான் தனியாக அட்டவணைப் படுத்தவில்லை. பின்வருவனவற்றை நான் பிரதிகள் என்று ஆய்ந்தறிந்துள்ளேன்: "சரீரம் மற்றும் இரத்தம்" என்பது "பாத்திரத்தில் பங்கேற்பவர்கள்" என்பதன் பிரதியாக உள்ளது, "ஆவிக்குரிய உடல்" என்பது "கிறிஸ்துவின் ஆவிக்குரிய உடல்" என்பதன் பிரதியாக உள்ளது. அவர் அட்டவணைப்படுத்தியுள்ள சில உருவகங்கள் கிறிஸ்துவை விட அதிகமாக சபையைக் குறிக்கின்றன. அவருடைய குறிப்புகளை நான் இந்த அட்டவணையில், "சபையின் தலை" மற்றும் "வானமண்டல ஆவிகளின் தலை" என்பதின் கீழ் குறிப்பிடுவேன். [3]இந்தக் குறிப்பானது பொதுவாக சபையைக் காட்டிலும் அதிகமாக அப்போஸ்தலர்களைக் குறிப்பதாக உள்ளது. இன்றைய நாளில் சபையானது ஏவப்பட்ட அப்போஸ்தலர்களால் தரப்பட்ட செய்தியை இன்றைய உலகிற்குப் பிரதிநிதிப்படுத்துகின்ற வரையிலும் அது அன்றைய நாட்களில் அப்போஸ்தலர்கள் இருந்ததைப் போலவே இருக்கின்றது என்பதே இதன் மறைவான கருத்தாய் இருக்கும்.